
# தமிழ் புத்தாண்டு ராசி பலன்கள்

கே.வி.பி.சரவணசர்மா,
பன்-9, 4-வது தெரு, கஸ்பாவன்நகர், தாம்பரம் மேற்கு, சென்னை-45



## மேஷம்



**பார்த்திப** வருஷத்தில் குரு பகவான் செப்டம்பர் கடைசிவரை 6-ம் இடமான கன்னி ராசியில் சுபமாய் அமர்ந்துள்ளதால் தங்களுக்கு ஏற்படும் துயரங்கள் குறையும். அக்டோபர் துவக்கத்தில் 7-ம் இடமான களத்திரத்தில் துலா ராசியில் சஞ்சரிப்பதால் மனைவி-கணவன் உறவு மேன்மை அடையும். தடைபட்ட திருமணங்கள் சுபமாய் முடியும்.

சனி பகவான் 3-ல் (சகோதரம்) சஞ்சரித்த காலத்தில் மிகவும் நல்ல பலன்களை தந்துள்ளார். ஜூன் துவக்கத்திலிருந்து மாத்ரு ஸ்தானம் செல்வதால் தாய் உடல் நிலை பாதிக்கலாம். வீடு, வாகனம் மூலம் செலவுகள் அதிகரிக்கும். புதிய இடம், பொருள் வாங்குவதை தவிர்க்கலாம்.

ராகு 12-ல் விரயத்தில் உள்ளதால் வீணான செலவுகள் ஏற்படும். எச்சரிக்கையுடன் இருத்தல் நன்று.

கேது 6-ல் பலன் தரும் நிலையில் உள்ளதால் கடுமையான முயற்சி செய்யும் வேலைகளில் பெரும் வெற்றி கிட்டும். அற்ற சனி, ராகுவின் கடுமையை கேது குறைப்பார். பொதுவாக பார்த்திப வருடம் சுந்தாய ஆரம்பமயில் ஆதாயம் விரயம் சமமாக இருக்கும்.

**பெண்கள்** குடும்ப உறவு நன்றாக அமையும். புதிய ஆபரண வரவு குறையும்.

**பரிகாரம்** திருநகரட்சி அம்மனுக்கு ஜென்ம நட்சத்திரத்தில் சென்று பாலை பாயசம் தேவையானவர்களுக்கு தானம் செய்தல் நன்று. திருமாங்கல்யம் சாத்தி வைக்கலாம்.

## ரிஷபம்



**குரு** துவக்கத்தில் மிக நல்ல பலனையும் பின்னர் குறைவாக பலனிப்பார். பூர்வ புண்ணியங்களால் தங்கள் நிலை மேன்மை அடைந்து பலன் கிட்டும். குருவிற்கு சிறந்தமான கடலையை அனாதை இல்லங்களுக்கு தானமாக வழங்குதல் வேண்டும்.

தங்களை பிடித்த சனி விலகுவதால் தங்களின் மொத்த கஷ்டங்களும் நீங்கி புது வாழ்வு துவங்குவீர்கள். இனி நீங்கள் நினைத்த காரியம் வெற்றி அடையும். மகிழ்ச்சி மேலும் பொங்க ஏழை குழந்தை ஒன்றுக்கு கருப்பு துணி (சட்டை) வாங்கி தரவும்.


ராகு 11-ல், கேது 5-ல் உள்ளது மிகவும் யோகமான ஒரு காலம். ஆயினும் குழந்தைகளின் உடல்நிலையில் கவனம் செலுத்தவும். இக்காலத்தில் புதிய முயற்சிகள் வெற்றி அடையும்.

பொதுவாக இவ்வருடம் யோகவருடம். எனவே நல்ல காலத்தில் தான தர்மம் செய்து புண்ணியம் பெறலாம்.

**பெண்கள்** தங்களின் நீண்ட நாளைய தேவை பூர்த்தி அடையும். இழந்தவைகள் மீட்டு அடைந்து சுகம் பெறுவீர்.

**பரிகாரம்** குரு, ராகுவை வழிபடுதல் நன்று. ஏழை தம்பதியருக்கு உள்ள அம்புயிறகு தேவையானதை நிறைவு தானம் செய்யவும்.

## மிதுனம்



**குரு** பகவான் முற்பகுதியில் காப்பு தடையாக இருந்தாலும் பிற்பகுதியில் நல்ல பலனை தருவார். உறவினர்களுடன் எச்சரிக்கையாக பழகுதல் நன்று. பிற்பகுதியில் இடமாற்றம் உண்டு.

சனி பகவான் ஜென்மத்திலிருந்து விடுபட்டு 2-ல் பெயர்வதால் அலைச்சல் குறைந்து காணப்பட்டாலும் பண ரீதியான கஷ்டம் தொடரும். குருவின் பார்வையால் சற்று கடுமை தணியும். ஆயினும் பிற்பான காலங்களில் உடல் நிலையில் அதிக கவனம் தேவை. வீண் வாக்குவாதங்களில் ஈடுபடுதல் தவிர்க்கவும்.


ராகு 10-ல் சஞ்சரிப்பதால் வேலையிடத்தில் அதிக கவனம் செலுத்தி விபத்தை தவிர்க்கவும். வேலை தொடர்பாக வெளியூர் மாற்றம் ஏற்படும்.

கேது 4-ல் இருப்பது அலைச்சல் தரும் ஆயினும் குருவுடன் சேர்ந்துள்ளதால் கடினம் குறையும். வருட பின் பகுதியும் மிகவும் சந்தோஷம் தரும். வெற்றிகள் கிட்டும். புது முயற்சிகள் பலன் தரும். தாயாரின் உடல் நிலையில் கவனம் தேவை.

**பெண்கள்:-** தங்களின் அவமானங்கள் குறைந்து வெற்றிமாலை கிடைக்கும். நல்ல வாழ்வு மலரும்.

**பரிகாரம்:-** தினமும் காகத்திற்கு அன்னம், மிருக காட்சிசாலை சென்று பாம்பிற்கு தேவையான உணவை தானம் செய்தல் நன்று.

## கடகம்



**கு**ரு பகவான் முற்பகுதியில் 3-ல் இருந்து பின்னர் 4-ல் பிரவேசிப்பதால நஷ்டம் குறைந்து, காரிய தடை மெதுவாக நீங்கும். உறவினர்களுடன் உறவு முறிவு ஏற்படலாம். எனவே நட்பு, உறவுகளுடன் அளவுடன் பழகவும். வீண் விஷயங்களில் தலையிட வேண்டாம். பதில் முயற்சிகளை தள்ளிப்போடவும்.

சனி 12-ல் இருந்து விலகி ஜென்ம சனியாக வருவதால் மிகவும் கடினமான காலம். பல சோதனைகளை எதிர்கொள்ள வேண்டும். புதிய முயற்சிகள் பலன் தராது. இடமாற்றம் உண்டு. செய்யாத தவறுக்கு தண்டனை கிடைக்கும். ஒழுக்கத்தால், தெய்வ பக்தியால், தன்னம்பிக்கையினால் மட்டுமே இவ்வருடத்தை தள்ளவேண்டும்.


ராகு 9-ல் பாக்யஸ்தானத்திலும் கேது 3-ல் சஞ்சரிப்பதாலும் சுமாரான பலனை மட்டுமே தரமுடியும். குலதெய்வ கிரகம் பிரயாணத்தில் அதிக கவனம் செலுத்தவும்.

பொதுவாக இவ்வருடம் ஆதாயம் அதிகமாக இருந்தாலும் கோட்சார பலனால் அதிக விரயமாகி விட்டது. எச்சரிக்கையுடன் பணத்தை முதலீடு செய்யவும். [illegible] தவிர்க்கவும்.

**பெண்கள்:-** பெண்மைக்கு சோதனைக்காலம். ஒழுக்கத்துடன், தைரியத்துடன் செயல்படவும். சிவனுக்கு அர்ச்சனை செய்து ஏழைமாட்டிற்கு [illegible] தானம் செய்யவும்.

**பரிகாரம்:-** சனீஸ்வர வழிபாடு தொடரவும்.

## சிம்மம்



**ரா**ஜ ராசி என்று அழைக்கப்படும் சிம்ம ராசிக்காரர்களுக்கு குரு 2-ல் நல்ல நிலையில் பல வெற்றிகளை தந்து புகழ் சேர்ப்பார். ஆயினும் அக்டோபருக்கு பிறகு குரு 3-ல் பிரவேசம் செய்வதால் குடும்பம், உறவு, நட்பு இவைகளால் பிரிவும் தொல்லையும் ஏற்படும்.

சனி பகவான் 12-ல் விரயமாக உள்ளதால் எந்த ஒரு காரியமும் உடனுக்குடன் தள்ளிப்போகும். பல வகையில் செலவு ஆகும். சனி சிம்மத்துக்கு பகை என்பதால் மற்ற காலங்களைவிட மிகவும் கடினமான சோதனை தோல்வியை சந்திக்க வேண்டும். நினைப்பது ஒன்று நடப்பது வேறு ஆக இருக்கும்.

ராகு 8-ல் சஞ்சரிப்பதால் பாதையில் தொல்லை, விபத்து ஏற்படும். அஷ்டம ராகு கஷ்டத்தை தரும். பிரயாணத்தை தவிர்க்க வேண்டும். கேது 2-ல் சஞ்சரிப்பதால் வாக்கு காப்பாற்ற முடியாத சூழல் ஏற்படும். வழக்கு, விவகாரம் தோல்வி அடையும்.

வருட பலனும் ஆதாயத்தை விட விரயம் அதிகம் உள்ளதால் சற்று எச்சரிக்கையுடன் நல்ல ஆலோசனை கேட்டு நடக்கவும்.

**பெண்கள்:-** மிகவும் கடினமான காலம். நல்லவர்களை ஆலோசனை செய்து நடக்க. பண விஷயங்களில் ஈடுபடுங்கள். உடல் நிலையில் மிக அதிக கவனம் தேவை.

**பரிகாரம்:-** சனி, ராகு, கேது, குரு இவை நான்கும் நல்ல நிலையில் இல்லாததால் தினமும் நவக்கிரக வழிபாடு செய்தல் நன்று. ஜென்ம நட்சத்திரத்தில் தாய், தகப்பனார், கல்வி தந்த ஆசிரியர்களுக்கு பாத பூஜை செய்தல் நன்று.

## கும்பம்



**ஜெ**ன்ம குருவில் பட்ட கஷ்டம் முற்பகுதியில் நீங்கி மேன்மை அடைவீர்கள். குரு 2-ல் இருப்பதால் தங்களின் வேலையில் உயர்வும், மாற்றமும் நிகழும். பொன், பொருள் சேர்க்கை உண்டு. கணவன் மனைவி உறவு மிகவும் சந்தோஷமாக இருக்கும்.

சனீஸ்வர பகவான் சாதகமான நிலையில் உள்ளதால் மிகவும் சந்தோஷமான காலம். பொன், பொருள் வரவு உண்டு. நல்லவர்களின் ஆலோசனை கிட்டும்.

ராகுவும், கேதுவும் ஜென்ம 7-ல் சாதகமற்ற ஸ்தானமாக சஞ்சரிப்பதால் பலன் பாதிதான் கிடைக்கும். குரு, சனியின் யோகத்தை இவைகள் பாதியாக குறைக்கிறது. எனவே மேன்மை அடைந்தாலும் கெட்ட பெயரும் கிடைக்கும். மிகவும் யோசனையுடன் மேல் அதிகாரியிடம் நடந்து கொள்ளவும். கணவன் மனைவியிடத்தில் கலகம் ஏற்படும். அமைதியாக அணுகி பிரச்சினைகளை குறைக்கவும்.

**பெண்கள்:-** தங்களின் விருப்பங்கள் நிறைவேறும். ஆயினும் கணவரை நேர்மையான வழியில் செலுத்தவும். தேவையற்ற வகைகளில் ஈடுபட வேண்டாம். பொதுவாக யோகமாக இருந்தாலும் பலன் பாதியாகவே உள்ளது. சிந்தித்து செயல்பட்டு வாழவும்.

**பரிகாரம்:-** ஏழை பெண்ணின் திருமணத்திற்கு உதவி செய்தல். விநாயகர் வழிபாடு நன்று.

**தனுசு:-** குரு பகவான் 12-ல் விரயஸ்தானத்தில் இருந்து ஜென்மத்திற்கு வருவதால் வருட பிற்பகுதியில்

## துலாம்

இடம் மாற்றம், வெளியூர் செல்லுதல் ஏற்படும். வெளிநாடு போகும் வாய்ப்பு உண்டு. குடும்பத்தினருடன் சச்சரவுகளில் ஈடுபட வேண்டாம்.



சனி பகவான் 10-ல் இருப்பதால் தொழில் நல்ல மேன்மை அடையும். புதிய உயர்வு கிட்டும். புகழ் கிடைக்கும். வெற்றிகள் குவியும். நல்ல ஜாதகருக்கு இது மிகவும் யோகமான காலம். மற்றவர்களுக்கு சாதாரண பலன் கிடைக்கும். நல்ல நிலையில் இருக்கும் பொழுது தானம் செய்து புண்ணியம் தேடல் நன்று.

ராகு, கேது முறையே 6-ல் 12-ல் இருப்பதால் மிகவும் யோகமும், புகழும் கிடைக்கும். சில வேளைகளில் நமது தவறால் புகழ் தட்டிப்போகும். அதிக கவனம் தேவை. புகழ் உச்சியில் மமதை கூடாது. பொதுவாக நல்ல பெயர் கிடைக்கும். அறிவு மேன்மை அடையும். பரிசு கிடைக்கும்.

**பெண்கள்:-** மிக நல்ல காலம். ஆயினும் உணவு விஷயங்களில் கவனம் தேவை. குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு யோசித்து பேசவும்.

**பரிகாரம்:-** ஏழை குழந்தைகளுக்கு கல்வி உதவி, எருமைக்கு புல்தானம், துர்க்கை வழிபாடு நன்று.

## விருச்சிகம்

**குரு** முற்பகுதியில் லாபகரமாகவும், பிற்பகுதியில் விரயமாக உள்ளதால், சம்பாதித்ததை கவனமாக செலவு, முதலீடு செய்யவும். நல்ல ஆலோசனைக்கு பின்னர் நிலம் வாங்குதலில் ஈடுபடவும். வெளியூர் பிரயாணம், இடமாற்றம் உண்டு.



சனி அஷ்டமத்தில் இருந்து விலகி 9-ம் இடமான பாக்கியஸ்தானத்தில் சஞ்சாரம் செய்வதால் கடந்த இரண்டரை ஆண்டுகாலமாக கஷ்டம் நீங்கி சுகம் பெறுவீர். வழக்கு, பிரச்சினை தீரும். குடும்ப ஒற்றுமை விளங்கி மிகவும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். தடைபட்ட காரியம் வெற்றி அடையும். திருமணம் கூடும். சுப பிரயாணம் நடைபெறும் இக்காலத்தில் சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்தல் நன்று.

ராகு, கேது மிக நல்ல பலனை தருவார்கள். நிலம், வீடு வாங்குதல் நடைபெறும். ஆயினும் புத்திரர்கள் படிப்பு, உடல் விஷயத்தில் பின் தங்கிய நிலை ஏற்படும். பொதுவாக நல்ல ஒரு வருடம். உறவினர் பிரிவு நீங்கும். நட்புகள் மலரும். குடும்ப ஒற்றுமை விளங்கும்.

**பெண்கள்:-** நல்ல ஒரு காலம். குழந்தைகளை அதிக கவனம் செலுத்தி வழிநடத்தவும். பொன், பொருள் சேர்க்கை உண்டு.

**பரிகாரம்:-** அனாதை இல்லங்களுக்கு வியாழன் அன்று மூக்கடலை தானம் செய்யவும். ஆசிரியர்களை வீட்டிற்கு அழைத்து பாதபூஜை செய்யவும்.

## தனுசு

**குரு** முற்பகுதியில் ஜீவனஸ் தானத்திலும் பிற்பகுதியில் லாபஸ்தானத்திலும் பிரவேசிப்பதால் லாப நஷ்ட பலன் சமமாக இருக்கும். பிற்பகுதி குரு ஓரளவு பலன் தருவார்.



சனி அஷ்டமத்தில் வசிப்பதால் கடினமான காலம் இது. மேற்கொள்ளும் முயற்சியில் தோல்வி, வழக்கு, விரயம் இப்படி கடினமான பாதையை கடக்க வேண்டும். நெருங்கிய உறவுகளால் தொல்லை, கணவன்- மனைவி இடையே பூசல், தேவையற்ற விஷயத்தால் தொல்லை ஏற்படும்.

பணியிடத்தில் கோபத்தால் பல கஷ்டங்களை சந்திக்க வேண்டியிருக்கும். வேலையிடத்தில் அதிக கவனம் செலுத்தவும். நோய் விஷயத்தில் அதிக முன்னெச்சரிக்கை தேவை. ஜாமீன் கையெழுத்து போடவேண்டாம். வாகனம் ஓட்டும் பொழுது எச்சரிக்கையுடன் செயல்படவும்.

ராகு - கேது 4-ல், 10-ல் சஞ்சரிப்பதால் வியாதிகள் வர வாய்ப்பு அதிகம். புதிய முயற்சிகள் தோல்வி அடையும். விலங்குகளால் தொல்லை உண்டு. பொதுவாக போதாத காலம் இது அதிக கவனம் தேவை.

**பெண்கள்:-** பொறுமை தேவை. ஆசைகளை குறைத்து எளிமையாக இருக்கவும்.

**பரிகாரம்:-** தவறாமல் சிவனை வழிபடவும். காகத்திற்கு அன்னம், எருமைக்கு புல்தானம் நன்று.

## மகரம்

**குரு** பகவான் துவக்கத்தில் பாக்கியம் தந்தாலும் பிற்பகுதியில் பலன்குறைவு. தொழில் விஷயத்தில் கவனத்துடன் செயல்படவும். வேலைகளில் அதிக ஈடுபாட்டுடன் கவனம் செலுத்தவும்.



சனிபகவான் களத்திரத்தில் சஞ்சரிப்பதால் மனைவி-கணவன் இடையே சண்டை, பூசல் வேற்று பெண்ணால் தொந்தரவு, மனைவியிடம் உறவு சரியின்மை நிகழும். சனி

டகவான் ராசிநாதனாக உள்ளதால் தொல்லைகள் விரைவாக மறையும். தூரதேசம் போக வேண்டிய கட்டாயம் ஏற்படும். நல்ல உறவுகள் கூட பெரிதாகும். மனைவியின் உடல் நிலை

ராகு கேது முறை

மோசமான பலன்களை தருவார்கள். வீடு, நிலம், வண்டி வாங்கும் யோகம் உள்ளது. சொத்து பிரச்சினை தீர்ந்து சுமூகமாக முடியும். திடீர் பணவரவு ஏற்படும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடைபெறும்.

**பொது பலன்:-** ராகு-கேது சஞ்சாரம் இருப்பதால் மேன்மை அடைவீர். பலன் குறைவு. கடின உழைப்புக்கு உயர்வு உண்டு. பகை இல்லை.

**பெண்கள்:-** பொன், பொருள் சேர்க்கை உண்டு. கணவரிடம் அனுசரித்து போகவும். வீண் விவாதத்தை தவிர்க்கவும்.

**பரிகாரம்:-** சனிக்கிழமையன்று எள்ளு தீபம் ஏற்றவும். ஏழை குழந்தைகளுக்கு புடவை தானம் நன்று.

# கும்பம்



**கு**ரு எட்டில் இருந்து 9-ல் பாக்கியஸ்தானத்தில் பிரவேசிப்பதால் கஷ்டங்கள் நீங்கி சுகத்தை தருவார். திடீர் உயர்வு, புகழ் உண்டு. கடுமையான உழைப்பால் வெற்றி கிடைக்கும்.

சனி பகவான் பெயர், புகழ் தரக்கூடிய 6-ம் ஸ்தானத்தில் இருந்து மிகவும் யோகங்களை தருவார். எதிரிகளின் நீண்ட நாள் தொல்லை நீங்கி வெற்றி பெறுவீர். லட்சுமிகரமாக இல்லம் மாறும். தடைப்பட்ட சுபகாரியங்கள் நடைபெறும். வீடு, வண்டி, நகை பாக்கியம் உண்டு. உங்களின் முந்தைய உழைப்பிற்கு இப்பொழுது புகழ் கிடைத்து மகிழ்ச்சியான வாழ்வு மலரும். கணவன் - மனைவி ஒற்றுமை ஓங்கும். வியாபாரத்தில் லாபம் உண்டு.


ராகு-கேது முறையே 2-ல், 8-ல் இருப்பதால் குழந்தைகள் நலன் முக்கியம். கடன் தந்து தொல்லை பெறவேண்டாம். குடும்ப உறவுகளில் சிறு சிறு தொல்லை ஏற்படலாம். அன்பால், அமைதியாக குடும்ப சிக்கலை கையாளவும்.

பொதுவாக நல்ல பலன் தந்தாலும், உறவுகளில் நெருக்கம் ஏற்படும்.

**பெண்கள்:-** யோசித்து பேசவும், அன்பால் குழந்தை, கணவனை கையாளவும், பொருள் வரவு உண்டு.

**பரிகாரம்:-** ஞாயிறு ராகு கால பூஜை செய்து துர்க்கையை வழிபாடு செய்யவும். தாட், நடப்பவருக்கு பாத பூஜை செய்தல் நன்று.

# மீனம்



**கு**ரு பகவான் 7-ம் இடத்தில் இருந்து 8-ம் ராசிக்கு அஷ்டம குருவாக பிரவேசிக்கிறார். இதனால் நஷ்டங்கள் ஏற்படும். யோசித்து தொழில் விஷயத்தில் ஈடுபடவும். புது முயற்சிகளை பலமுறை யோசித்து மேற்கொள்ளவும்.

சனி பகவான் புத்திரஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் குழந்தைகளின் நலனில் அதிக கவனம் செலுத்தவும். சிறப்பு பார்வை செலுத்தி அவர்களை நல்வழி படுத்துதல் முக்கியம். பெரியோர்களின் ஆசியால் தோல்வியில் முடியும்.

ராகு-கேது சப்தமத்தில் சஞ்சரிப்பதால் பண விரயம், பலவித நஷ்டம், நடை விபத்து என பல தொல்லைகள் ஏற்படும். தேவையில்லாத விஷயங்களில் ஈடுபடவேண்டாம். யோசித்து முதலீடு செய்யவும். குடும்ப செலவு அதிகரிக்கும். மருத்துவ செலவு கூடும். பண விஷயத்தில் உறவுகளில் பிரிவு ஏற்படும்.

**பொதுவாக :-** சனி, ராகு, கேது கூட பலன்களை குறைவாக தந்தாலும் குரு பெரிய பாதிப்பை தரமாட்டார். ஏனெனில் குரு மீன ராசிக்கு அதிபதி ஆயினும் புதிய முயற்சிகளை தள்ளி போடவும்.

**பெண்கள்:-** குடும்ப உறவில் குறைபிருக்காது. திடீர் செலவு ஏற்படும். யோசித்து பண விஷயங்களில் ஈடுபடவும்.

**பரிகாரம்:-** தட்சிணா மூர்த்தியை வணங்கவும். வியாழனுக்கு தென்னைகுலை தானம் செய்யவும். ஆசிரியர்களுக்கு பாத பூஜை செய்து வணங்கவும்.

அடுத்த இதழில்...

# அமாவாசை

மங்களமா?
அமங்களமா?

தெளிவான
ஜோதிட ஆராய்ச்சி